1989 நவம்பர் 1]

கேட்டுக்கொண்டிருக்கிறேன். அதைத் தருவார்களா என்று கேட்பதைவிட, தருவார்கள் என்ற நம்பிக்கையோடு இருக்கையில் அமர்கிறேன், நன்றி, வணக்கம்.
(சிரிப்பு)

(பதில் இல்லை)

வல்லநாடு மலையில் மிருகங்கள்.

* 3478. திரு. சு. குருநாதன் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரனார் மாவட்டம், வல்லநாடு மலையில் உள்ள மிருகங்களை பாதுகாப்பதோடு அங்கு மான்கள் வளர்க்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) அங்குள்ள மிருகங்கள் எவை எவை ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,

(அ) சிதம்பரனார் மாவட்டம், ஸ்ரீவைகுந்தம் வட்டம், வல்லநாடு மலையில் ஏற்கெனவே வல்லநாடு வெளி மான்கள் வனக் காப்பகம் அமைக்கப்பட்டு மான்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) இங்கு 20 வெளி மான்கள், முயல்கள், முள்ளெலிகள் பலவகைப் பறவை இனங்கள் வாழ்கின்றன.

தலைமைச் செயலக வளாகத்தில் உணவு விடுதியைச் சுற்றி தேங்கிக் கிடக்கும் சாக்கடை நீர்.

* 3528. திரு. பி. காளியப்பன் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தலைமைச் செயலக வளாகத்தில் உணவு விடுதிகளைச் சுற்றி தேங்கிக் கிடக்கும் சாக்கடை நீரை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?